செ.வெ.எண்: 44/ஜூன் நாள் : 22.06.2017

## இராமநாதபுரம் மாவட்டம்

## மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் 2016-2017 ஆம் நிதியாண்டில் ரூ.8.16 கோடி மதிப்பிலான திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. 6,297 பயனாளிகள் பயனடைந்துள்ளனர்.

## மாற்றுத்திறனாளிகள் குழந்தைகளுக்கான ஒருநாள் சுற்றுலா வாகனத்தினை கொடியசைத்து துவக்கி வைத்து

## மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

இராமநாதபுரம் மாவட்டம், மாவட்ட ஆட்சியர் வளாகத்தில் இன்று (22.06.2017) மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பாக ஆரம்ப கால பயிற்சி மையத்தில் பயிற்சி பெறும் மாற்றுத்திறனாளிகள் குழந்தைகளுக்கான ஒரு நாள் சுற்றுலா வாகனத்தினை மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள், கொடியசைத்து துவக்கி வைத்தார்.

துவக்கி வைத்து மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது:

"தமிழ்நாடு அரசு மாற்றுத்திறனாளிகளின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்திடும் விதமாக எண்ணற்ற திட்டங்களை தீட்டி செயல்படுத்தி வருகிறது. அதனடிப்படையில் இராமநாதபுரம் மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் 2016-2017ஆம் நிதியாண்டில் மனவளர்ச்சி குன்றியோருக்கான பராமரிப்பு உதவித்தொகை 3047 பயனாளிகளுக்கு ரூ.5,48,46,000/-ம், கடும் உடல் ஊனமுற்றோருக்கான பராமரிப்பு உதவித்தொகை 848 பயனாளிகளுக்கு ரூ.15264000/-ம், தசைச்சிதைவுநோயினால் பாதிக்கப்பட்டோருக்கான பராமரிப்பு உதவித்தொகை 66 பயனாளிகளுக்கு ரூ.1188000/-ம், தொழுநோயால் பாதிக்கப்பட்டோருக்கான பராமரிப்பு உதவித்தொகையாக 62 பயனாளிகளுக்கு ரூ.744000/-ம், கல்வி உதவித்தொகை 321 பயனாளிகளுக்கு ரூ.902000/-ம், 10ம் வகுப்பு 12ம் வகுப்பில் முதல் மூன்று நிலைகளைப் பெற்ற காது கேளாத மற்றும் வாய் பேச இயலாத மாணவ, மாணவியருக்கான பரிசுத்தொகை 4 பயனாளிகளுக்கு ரூ.30500/-ம், சிறு மற்றும் குறுந்தொழில் வங்கிக்கடன் மானியம் 55 பயனாளிகளுக்கு ரூ.550000/-ம், வேலையில்லா படித்த இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பை உருவாக்கும் திட்டத்தின் கீழ் 9 பயனாளிகளுக்கு ரூ.71,800/-ம், பாரதப்பிரதமரின் வேலைவாய்ப்பை உருவாக்கும் திட்டத்தின் கீழ் 1 பயனாளிக்கு ரூ.5092/-ம், ஏர்வாடி மனநலக் காப்பகத்தில் உணவூட்டு மற்றும் ஊதிய மானியம் 48 பயனாளிகளுக்கு ரூ.821610/-ம், மீட்புத்திட்டத்தின் கீழ் 8 பயனாளிகளுக்கு ரூ.12000/-ம், மனவளர்ச்சி குன்றியோருக்கான ஆரம்பகால பயிற்சி மையம் ஊதிய மானியமாக 8 பயனாளிகளுக்கு ரூ.684000/-ம், 6 மனவளர்ச்சி குன்றியோருக்கான சிறப்புப் பள்ளிகளுக்கான ஊதிய மானியமாக 18 பயனாளிகளுக்கு ரூ.1620000/-ம், இராமநாதபுரம் உடல் ஊனமுற்றோருக்கான தனியார் இல்லத்தில் உணவூட்டு மானியமாக 50 பயனாளிகளுக்கு ரூ.227500/-ம், மூன்று சக்கர வாகனம் 35 பயனாளிகளுக்கு ரூ.2054150/-ம், மூன்று சக்கர வண்டி 5 பயனாளிகளுக்கு ரூ.32000/-ம், மடக்கு சக்கர நாற்காலி 15 பயனாளிகளுக்கு ரூ.81000/-ம், சிறப்பு சக்கர நாற்காலி 5 பயனாளிகளுக்கு ரூ.27900/-ம், நவீன செயற்கை அவயம் 8 பயனாளிகளுக்கு ரூ.180000/-ம், கால்தாங்கி 10 பயனாளிகளுக்கு ரூ.18400/-ம், காதொலிக்கருவி 100 பயனாளிகளுக்கு ரூ.1500000/-ம், மோட்டார் பொருத்திய தையல் இயந்திரம் 70 பயனாளிகளுக்கு

ரூ.256900/-ம், ஊன்றுகோல் 35 பயனாளிகளுக்கு ரூ.10010/-ம், முதுகுத்தண்டுவடம் பாதித்தோருக்கான சிறப்பு சக்கர நாற்காலி 30 பயனாளிகளுக்கு ரூ.600000/-ம்,இலவச பேருந்துப் பயணச்சலுகை 236 பயனாளிகளுக்கும், 0-6 வயது வரையிலான மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கு நடமாடும் சிகிச்சைப்பிரிவு வாகனம் மூலம் சிகிச்சை 1203 பயனாளிகளுக்கும் என மொத்தம் 6,297 பயனாளிகளுக்கு ரூ.81655062/- மதிப்பிலான திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய அடையாள அட்டை இதுவரை 27105 மாற்றுத்திறனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் இன்றைய தினம் மாற்றுத்திறனாளிகள் வாழ்வில் புத்துணர்வு பெறும் வகையில் இராமேஸ்வரம் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி கழகம் மற்றும் மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் ஒரு நாள் சுற்றுலா சென்று வர ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இராமநாதபுரம் மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் கீழ் செயல்பட்டு வரும் ஆரம்ப கால பயிற்சி மையங்களில் மனவளர்ச்சி குன்றிய குழந்தைகள் பயிற்சி பெற்று வருகின்றனர். இப்பயிற்சி மையங்களில் பயிற்சி பெற்று வரும் 20 மாற்றுத்திறனாளிகள், அவர்களைச் சார்ந்தவர்கள் மற்றும் சிறப்பாசிரியர்கள் ஆகியோர் இராமேஸ்வரம் டாக்டர் அப்துல்கலாம் அவர்களின் வீடு, பாம்பன் பாலம், மண்டபம் தீவுப்பூங்கா (Island Park) ஆகிய இடங்களுக்கு சுற்றுலா செல்ல ஏற்பாடு செய்யப்பட்டு, இவர்களுக்கான போக்குவரத்து கட்டணம், நுழைவுக்கட்டணம், சிற்றுண்டி மற்றும் மதிய உணவு ஆகிய செலவினங்கள் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் அலுவலகத்தின் மூலம் இராமேஸ்வரம் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி கழகத்திற்கு வழங்கப்பட்டுள்ளது” என மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்வின் போது மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் திரு.சி.தங்கவேல் உள்பட அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**